செ.வெ.எண்:20 நாள்: 15.04.2019

**நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்-2019-ஐ முன்னிட்டு நடைபெற்று வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த அனைத்து தொடர்பு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்**

**தேர்தல் பொது பார்வையாளர் திரு.விஜய்குமார்,G.Srkr, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.**

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்-2019-ஐ முன்னிட்டு நடைபெற்று வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த அனைத்து தொடர்பு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 28.மயிலாடுதுறை பாராளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.விஜய்குமார்,G.Srkr, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று(15.04.2019) நடைபெற்றது.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் வாக்குபதிவு வரும் 18-ம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டத்தில் வரும் 16-ம் தேதி மாலை 6.00 மணிக்கு மேல் தேர்தல் பிரச்சாரம், தேர்தல் பொதுக்கூட்டம், பேரணி ஒருங்கிணைத்தல், நடத்துதல், பங்கேற்றல், உரையாற்றுதல் கூடாது.

தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தபின் நட்சத்திர பேச்சாளர்கள், மற்ற அரசியல் தலைவர்கள், செய்தியாளர்கள் சந்திப்பு மற்றும் ஊடகங்களுக்கு பேட்டி அளித்தல் போன்றவற்றில் பங்கேற்று தேர்தல் தொடர்பான கருத்து தெரிவிக்கக்கூடாது.

வெளிதொகுதிகளிலிருந்து வந்துள்ள அரசியல் தலைவர்கள், தொண்டர்கள் 16.04.2019 மாலை 6.00 க்குள் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும். வழங்கப்பட்டுள்ள வாகன அனுமதி அனைத்தும் 16.04.2019 மாலை 6.00 மணிக்கு பிறகு செல்லுபடியாகாது.

வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டருக்கு அப்பால் வேட்பாளர்களின் தற்காலிக அலுவலகம் அமைக்கவும் அதில் இரண்டு நபர்கள் மட்டுமே அங்கு பணியாற்ற அனுமதிக்கப்படுவர். 16.04.2019 மாலை 6.00 மணி முதல் தேர்தல் தொடர்பான வாக்குப்பதிவு, கருத்துக்கணிப்புகள் மின்னணு ஊடகங்கள் வழியாக செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி, அனைத்து தேர்தல் தொடர்பு அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**